செய்தி வெளியீடு எண்.72/2017 நாள் 05.12.2017

# சென்னை நகரில் நிலத்தடி நீர்மட்ட விபரம்

சென்னை மாநகரின் ஒரு வருடத்திற்கான சராசரி மழையின் அளவு 1200 மி.மீ. ஆகும். இந்த மழை பொழிவு இரண்டு காலக் கட்டங்களாக, அதாவது தென்மேற்கு பருவமழை காலம் (ஜுலை முதல் செப்டம்பர் வரை) 400 மி.மீ. என்ற அளவிலும், மற்றும் வடகிழக்கு பருவமழை காலம் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) 800 மி.மீ. என்ற அளவிலும் பெய்கிறது. சென்னை மாநகர நீர்த்தாங்கிகள் மேற்கூறிய மழை காலங்கள் மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டப்படுகிறது.

சென்னைக் குடிநீர் வாரியம், சென்னை நகரின் நிலத்தடி நீர் மட்டத்தையும், அதன் உப்புத் தன்மையையும் மாதந்தோறும் சென்னையின் பரப்பளவான 426 சதுர கிலோ மீட்டரில், 145 கண்காணிப்பு கிணறுகள் மூலம் ஆய்வு செய்து வருகிறது. சென்னை மாநகரில் மூன்று விதமான மண் வகைகள் உள்ளன. அதாவது மணல் சார்ந்த பகுதி, களிமண் சார்ந்த பகுதி மற்றும் பாறை சார்ந்த பகுதிகளாகும். இந்த மூன்று மண் பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்வு மற்றும் நீர் ஊடுரும் தண்மை வேறுபடும்.

நிலத்தடி நீர் மட்டமானது ஆண்டு தோறும் பருவநிலைக்கு ஏற்றவாறு மாறக்கூடியது. எனவே நிலத்தடி நீர் மட்டம் மற்றும் அதன் தரத்தை குறிப்பிட்ட மாதத்தின் அளவை சென்ற வருடத்தின் அதே மாதத்துடன்தான் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். ஒரு வருடத்தில் உள்ள வெவ்வேறு மாதங்களுடன் ஒப்பிட்டு பார்க்கக்கூடாது. ஏனென்றால் குறிப்பிட்ட வருடத்தின் ஜுலை மாத நிலத்தடி நீர் மட்டம் மற்றும் அதன் தரம் அந்த வருடத்தின் ஜனவரி மாதத்தைவிட எப்பொழுதும் குறைவாகவே இருக்கும்.

சென்னை நகரில் நவம்பர் 2016 மற்றும் நவம்பர் 2017 மாதங்களில் உள்ள நீர்மட்ட அளவுகளின் ஒப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| பகுதி | நிலத்தடி நீர் மட்ட அளவு நவம்பர் **2016** | நிலத்தடி நீர் மட்ட அளவு நவம்பர் **2017** | நீர்மட்ட உயர்வு மீட்டரில் |
|---|---|---|---|
| **1 – திருவொற்றியூர்** | 3.81 | 2.54 | (+) 1.27 |
| **2 – மணலி** | 3.28 | 2.60 | (+) 0.68 |
| **3 – மாதவரம்** | 3.78 | 1.88 | (+) 1.88 |
| **4 – தண்டையார்பேட்டை** | 4.94 | 3.78 | (+) 1.16 |
| **5 – இராயபுரம்** | 5.00 | 4.17 | (+) 0.83 |
| **6 – திரு.வி.க.நகர்** | 2.83 | 2.28 | (+) 0.55 |
| **7 – அம்பத்தூர்** | 4.92 | 2.87 | (+) 2.05 |
| **8 – அண்ணாநகர்** | 4.37 | 2.62 | (+) 1.75 |
| **9 – தேனாம்பேட்டை** | 4.09 | 3.29 | (+) 0.80 |
| **10 – கோடம்பாக்கம்** | 4.46 | 3.06 | (+) 1.40 |
| **11 – வளசரவாக்கம்** | 4.98 | 2.60 | (+) 2.38 |
| **12 – ஆலந்தூர்** | 3.87 | 1.43 | (+) 2.44 |
| **13 – அடையார்** | 3.35 | 2.55 | (+) 0.80 |
| **14 – பெருங்குடி** | 4.59 | 1.71 | (+) 2.88 |
| **15 – சோழிங்கநல்லூர்** | 2.95 | 1.92 | (+) 1.03 |

மேற்கூறிய நவம்பர் **2016** மற்றும் நவம்பர் **2017** மாதங்களில் உள்ள நீர்மட்ட அளவுகளை ஒப்பிடும்பொழுது சென்னை மாநகரிலுள்ள **15** பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் **0.55** மீ. முதல் **2.88** மீ. வரை உயர்ந்துள்ளது.







மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்